O.S No.274/2019 (P.W– 1)

திரு. வேலுசாமி

24.11.2022

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1) என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் வாடகை அதிகமாக கேட்டதால் வழக்கு போட்டுள்ளேன். வழக்கு சொத்து அளவு என்ன என்றால் கிழமேல் 21 அடியும் தென்வடல் 47 அடியும் கொண்டது. மேற்கண்ட அளவை தவிர வேறு இடத்தை நான் பயன்படுத்தவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து வெங்கடேசபெருமாள் கோவில் சொத்து என்றால் சரிதான். நான் எந்த வருடத்தில் வாடகைக்கு வந்தேன் என்றால் 1984 ல் வந்தேன். தேதி மாதம் ஞாபகமில்லை. அந்த சமயத்தில் மேலே சொன்ன சதுரடி அளவுள்ள காலியிடத்தில் தான் வாடகைக்கு வந்தேன் என்றால் சரிதான். வாடகை ஒப்பந்தம் வாய் மொழி ஒப்பந்தம் என்றால் சரிதான்.

2) வாய் மொழி ஒப்பந்தம் எத்தனை வருடத்திற்கு பேச பட்டது என்றால் நிரந்தரமாக இருப்பதற்கு பேசப்பட்டுள்ளது. நிரந்தரமாக இருப்பதாக பேசியதற்கு ரசீது எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். வாய்மொழி ஒப்பந்தத்தின் படி வாடகை ஏற்றியதை தகவல் கொடுத்தார்கள் என்றால் இல்லை. அவர்களாகவே வாடகையை ஏற்றி கொண்டார்கள். நான் சொல்வது போல இல்லை என்றும் என்னிடம் சொல்லிவிட்டு தான் வாடகையை ஏற்றினார்கள் என்றால் சரியல்ல. வாடகைக்கு வந்ததும் தென்னங்கீற்றில் சாலை போட்டேன். பின்னிட்டு 5 வருடம் கழித்து சுவார் வைத்து ஓடு போட்டு கொண்டேன். நான் என்ன கடை வைத்துள்ளேன் என்றால் தேனீர் கடை வைத்துள்ளேன். அதில் குடியிருந்து வருகிறேன் என்றால்சரிதான்.

3) வழக்கு சொத்த என்ன சர்வே என்னில் உள்ளது என்றால் 182/2 பி உள்ளது. 1984 ல் மாதவாடகை எவ்வளவு பேசப்பட்டது என்றால் மாதத்திற்கு 15 ரூபாய் பேசப்பட்டது. 1990 ல் மாத வாடகையை ரூ. 30 திற்கு உயர்தினார்கள். அந்த தகவலை என்னிடம் சொல்லி உயர்த்தினார்கள் என்றால் சரிதான். அதன் படி நான் வாடகை செலுத்தினேன் என்றால் சரிதான். அந்த வாடகைகளுக்கு எனக்கு ரசீது கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பில் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

(ஒம்) எஸ்.வடிவேல்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.